MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 28.09.2022 (Ordinary)

<table>
<tr><th>Resolution No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td></td><td>28.09.2022 ஆம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு<br>நடைபெற்ற சாதாரணகூட்டம்<br>முன்னிலை: திரு.உ.முகமதுயாசின், நகர்மன்றத்தலைவர்</td><td></td></tr>
<tr><td>115</td><td>மன்றப்பொருள் எண்.1<br>மாண்புமிகு தமிழகம் முதலமைச்சர் சிறப்பு திடடம் மூலம் தமிழக முழுவதும் ஏற்கனவே தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பயன்பாட்டினை தவிர்க்கும் விதமாக இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு கீழ்க்கண்ட விபரப்படி உள்ளதை அச்சடித்து விநியோகம் செய்ய 17.06.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>
<table>
<tr><td>வ. எண்.</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>நெகிழிப்பயன்பாட்டை தவிர்த்து மஞ்சப்பை உபயோகத்தை குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்– 1 க்கு ரூ.</td><td>மஞ்சப்பை விழிப்புணர்வு மல்டி கலர் நோட்டீஸ் – 1க்கு ரூ.</td></tr>
<tr><td>1</td><td>திருநெல்வேலி மாவட்ட மல்டிபர்பஸ் சர்வீஸ் இன்டரியல் சர்வீஸ்</td><td>ரூ.16/–<br>(GST வரி தனி )</td><td>ரூ.8/–<br>GST வரி தனி )</td></tr>
<tr><td>2</td><td>தூத்துக்குடி மாவட்ட Hitech printing and Allied service Industrial co operative society LTD.</td><td>ரூ.15/–<br>GST வரி தனி )</td><td>ரூ.7/–<br>GST வரி தனி )</td></tr>
<tr><td>3</td><td>Kovilpatti Small Scale Industries service Industrial co operative society LTD, TUTI-9</td><td>ரூ.15.50<br>GST வரி தனி )</td><td>ரூ.7.50<br>GST வரி தனி )</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தூத்துக்குடி மாவட்ட Hitech printing and Allied service Industrial co operative society LTD. நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினத்தையும் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td>116</td><td>மன்றப்பொருள் எண்.2<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி கடிதம் ந.க.எண்.18856/2022/தூஇதி2 நாள்.13.07.2022 கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் புதிதாக சமுதாய கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.19.28 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 4, வெள்ளநாதன்பட்டி மந்தை AD காலனியில் புதிதாக சமுதாயக்கழிப்பறை கட்டும் பணி ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், அனுமதி வழங்ப்பட்ட ரூ.19.28 இலட்சம் போக மீதமுள்ள ரூ.5.72இலட்சம் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>117</td><td>மன்றப்பொருள் எண்.3<br>15th CFC 2021–22 Tied Grant திடக்கழிவு மேலாண்மை பணிக்காக கசடு கழிவு நீர் உறிஞ்சும் வாகனம் ASR Body works நிறுவனத்தால் வழங்கப்பட்டமைக்கு UNITED INDIA INSURANCE நிறுவனத்தில் காப்பீடு செய்தமைக்கான கட்டணம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்தமைக்கான கட்டணம் ரூ.58684 வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>118</td><td>மன்றப்பொருள் எண்.4<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட வார்டுகளில் பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளின் அடிப்படையில் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண்.8ல் கஸ்தூரிபாய் நகர் வெற்றிவேல் பள்ளி சாலை வீதியில் மூன்று குறுக்கு வீதியில் உள்ள கழிவுநீர் வடிகால்களை புதிதாக அமைக்கும் பணி.</td><td>28.35</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண்.7ல் அனுமார் கோவில் தெருவில் உள்ள மழைநீர்வடிகால் பழுதடைந்துள்ளதை கழிவுநீர் வடிகால்களை புதிதாக அமைக்கும் பணி.</td><td>4.98</td></tr>
<tr><td>3.</td><td>வார்டு எண்.11ல் சொக்கம்பட்டி பிரதான சாலையில் அங்கன்வாடி அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி.</td><td>1.15</td></tr>
<tr><td>4.</td><td>வார்டு எண் 22ல் சீதக்காதி நடுத்தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி.</td><td>1.05</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>15.53</td></tr>
</table></td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br><br>மேற்கண்ட பணிகளை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம். | |
| 119 | **மன்றப்பொருள் எண்.5**<br>பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி, மூவேந்தர் நகர் 3வது தெருவில் புதிய தெருவிளக்கு அமைக்கப்பட்டதற்கு புதிதாக மின் இணைப்பு பெறுவதற்கான கட்டணம் ரூ.34765/– மின் வாரியத்திற்கு செலுத்தியதை மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் | அனுமதிக்கப்பட்டது. |
| 120 | **மன்றப்பொருள் எண்.6**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட கருத்தபுளியம்பட்டி கிராமத்தில் உள்ள பொதுப்பணித்துறை வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்து வசித்து வரும் சொக்கன் மனைவி அழகுபிள்ளை மற்றும் 28 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க தடை ஏதும் இல்லை என நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகலை அனுப்பி வைக்குமாறு மேலூர் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.288/2021/அ1 நாள்.08.08.2022 ல் கோரப்பட்டுள்ளது. சொக்கன் மனைவி அழகுபிள்ளை மற்றும் 28 நபர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரம் நலன் கருதி இலவச வீட்டு மனை பட்டா வழங்க இந்நகராட்சிக்கு தடை ஏதும் இல்லை என தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1656/2022/எப்1) | அனுமதிக்கப்பட்டது. |
| 121 | **மன்றப்பொருள் எண்.7**<br>மாநில நிதி ஆணைய நிதி 2022–23, 2023–24ன் கீழ், இந்நகராட்சி அலுவலக முதல்தளத்தில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு 23.08.2022 அன்று இரண்டு உறை முறையில் மின்ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், இரண்டு ஒப்பந்தகாரர்களும் தகுதிவாய்ந்தவர்களாக கருதப்பட்டு 24.08.2022 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் (Online) விலைப்புள்ளி திறக்கப்பட்டதில் விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குபட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எண்.</td><td>வேலையின் விபரம்</td><td>மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில்</td><td>மதிப்பீடு ரேட்டைவிட அதிக அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</td><td>மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>1.</td><td>இந்நகராட்சி அலுவலக முதல்தளத்தில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி</td><td>ரூ.75.00</td><td>திரு.எம்.லத்திப்,<br>ஒப்பந்ததாரர்<br>0.11 % அதிகம்</td><td>திரு.வி.அங்குராஜ்,<br>ஒப்பந்ததாரர்<br>2.69 % அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு<br>
மேற்படி பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் திரு.எம்.லத்திப், என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 0.11% அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் குறைத்து வழங்க(Negociation) அறிவிப்பு அனுப்பப்பட்டதில், ஒப்பந்ததாரரால் மதிப்பீட்டினை விட 0.06% குறைத்து விலைப்புள்ளி வழங்கியுள்ளதையும், மேற்கண்ட பணி அவசியப்பணியாக குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியிருப்பதால் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>122</td>
<td>
மன்றப்பொருள் எண்.8<br><br>
இந்நகராட்சியின் 2021–2022ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
பதிவு செய்யலாம்.
</td>
<td>பதிவு செய்யப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>123</td>
<td>
மன்றப்பொருள் எண்.9<br>
இந்நகராட்சி அலுவலக முதல்தளத்தில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு 23.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோர பொதுமக்கள் அறியும் வகையில் தினசூரியன் நாளிதழில் 05.08.2022 அன்று விளம்பரம் செய்தமைக்கான கட்டணம் ரூ.19530/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>124</td>
<td>
மன்றப்பொருள் எண்.10<br>
நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி கடிதம் ந.க.எண்.31113/2021/CFC-1 நாள்.24.08.2022 கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, 15வது மத்திய நிதிக்குழு 2021–22 Untied Grant ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும்.
<table>
<tr><td>வ.எண்.</td><td>பணியின் விபரம்</td><td>மதிப்பீடு<br>ரூ.இலட்சத்தில்</td></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண்.6 வாரச்சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தினசரி சந்தை கடைகள் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி.</td><td>5.00</td></tr>
<tr><td>2.</td><td>மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 20, பிஸ்மில்லா நகர்3 , 4, மற்றும் 5வது குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. (Unicode 116006S68, 116006S69, 116006S70),</td><td>5.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>10.00</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>125</td>
<td>
மன்றப்பொருள் எண்.11<br>
இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் கொசு உற்பத்தியை கட்டுப்படுத்த முதிர்ந்த கொசுக்களை அழிப்பதற்கு புகை அடிக்க பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்க்கண்டவாறு உள்ள இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதை பழுதுநீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.30இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>
1. கேஸ்டைப் சிறிய மிஷின்– 10<br>
2. Hand fogging Machine -4<br>
3. Vehicle mount and Fogging Machine - 01<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 126 | **மன்றப்பொருள் எண்.12**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் நகரில் உள்ள நச்சுத்தொட்டிகளில் (Septic tank) சுத்தம் செய்ய புதிதாக வாங்கப்பட்டுள்ள கழிவு உறிஞ்சும் லாரி (Sullage tanker Lorry) TN 59 CV 9010 ஐ பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், கழிவுநீர் உறிஞ்சும் லாரியை கொண்டு ஒவ்வொரு வீடு மற்றும் வர்த்தக நிறுவனங்களில் உள்ள நச்சுத்தொட்டியில் உள்ள கழிவு நீரை உறிஞ்சி அகற்ற ஒவ்வொரு நடைக்கும் கட்டணமாக ரூ.2000/– நிர்ணயம் செய்யவும், மேற்படி பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.50000/– க்கும், மேற்படி கட்டணம் நிர்ணயம் செய்துள்ளதை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 127 | **மன்றப்பொருள் எண்.13**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதார டிப்பர் லாரி TN59 BX 1344 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற கீழ்க்கண்டவாறு பழுதுப்பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>1. இன்ஜின், க்ரவுன், க்யர் ஆயில் சர்வீஸ்<br>2. அனைத்து வீல், கிரீஸ் மாற்றம், பேரிங் மாற்றுதல்<br>3. தொட்டி டிங்கரிங் வேலை பார்த்தல்<br>4. வாட்டர் பம்ப் , க்ரவுண் பேரிங், க்யர் பேரிங் மாற்றுதல்<br>5. எலக்ட்ரிக்கல் பேட்டரி, சீட் லைனீங் ஒர்க் சரி செய்தல்<br>6. பெயிண்டிங் அடித்து எப்சி எடுத்தல்<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 128 | **மன்றப்பொருள் எண்.14**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட பிரதான சாலைகளில் உள்ள மழைநீர் வடிகால்களை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் தூர்வாரும் பணி மேற்கொள்ள 07.09.2022 அன்று மின்ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின் ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குபட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **2** | 3 | 4 | 5 |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட பிரதான சாலைகளில் உள்ள மழைநீர் வடிகால்களை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் தூர்வாரும் பணி. | 3.60 | திருமதி.பதுருனிஷா ஒப்பந்ததாரர் –0.13 % குறைவு | திரு.எம்.லத்திப், ஒப்பந்ததாரர் 8.42 % அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் திருமதி.பதுருனிஷா, என்பவர் மதிப்பீடு ரேட்டை விட–0.13% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் , பருவமழை காலமாக உள்ளதால் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

129

**மன்றப்பொருள் எண்.15**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24 –B- 24–H, இன்படி அந்தந்த நகராட்சிகளில் வார்டு குழு மற்றும் பகுதி சபை ஏற்படுத்துவதற்கும் அதன் செயல்பாடுகள் குறித்தும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளின் (வார்டு குழு மற்றும் பகுதி சபை) விதிகள் 2022 உருவாக்கப்பட்டு அரசாணை எண்.92 நகராட்மசி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.358 நாள்.24.06.2022 இல் வழிகாடடு நெறிமுறைகள் வழங்கி வரப்பெற்றுள்ளது. அதன்பேரில் வார்டு குழு(Ward Committee) மற்றும் பகுதி சபை (Area Sabha) குழு நிர்ணயம் செய்திடவும், குழு குறித்த செயல்பாடுகள் தெரிவித்து வரப்பெற்ற அரசாணை மற்றும் அரசிதழ் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) அரசாணை வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், அரசிதழில் வெளியீடுவதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (1588/2022/சி1)

அ) பதிவு செய்யப்பட்டது.

ஆ) அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 130 | **மன்றப்பொருள் எண்.16**<br>மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரிசந்தையினை திரு.குப்புராஜ் என்பவர் 2019–2020 முதல் 2021–2022 ம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகள் குத்தகை எடுத்துள்ளார். அன்னாரின் குத்தகை காலம் 31.03.2022உடன் நிறைவடைகிறது. மேலூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை பழுதடைந்துள்ளதால் அரசு மான்யமாக புதிய தினசரி சந்தை கட்டுவதற்கு அனுமதி வழங்கியதன் அடிப்படையில் மேற்படி கடைகளை அப்புறப்படுத்தி தற்காலிக தினசரி சந்தை அமைத்து மேற்படி சந்தையில் ஏற்கனவே 2021–2022ம் ஆண்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் உரிமம் அனுபவித்து வந்த உரிமததாரர் திரு.எல்.குப்புராஜ் அவர்கள் தனக்கே மேற்படி ஒப்பந்தத்தை நீடித்து வழங்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு W.P.(MD).No. 5302/2022 நாள்.25.03.2022 உத்தரவில் மேற்படி உரிமததாரருக்கு 4வார காலத்திற்குள் உரிமதாரருக்கு உரிய பரிகாரம் வழங்க உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில் ஏற்கனவே எடுத்த 2021–2022ம் ஆண்டு ஏலத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து ஆறுமாத காலத்திற்கு உரிமத்தினை நீடித்து இந்நகர்மன்ற தீர்மான எண்.12 நாள்.31.03.2022 அன்று அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் திரு.எல்.குப்புராஜ் உரிமதாரருக்கு 6 மாத காலத்திற்கு உரிமத்தை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது தினசரி சந்தை மற்றும் கடைகள் புதிதாக கட்டும்பணி நடைபெறுவதால் வாரச்சந்தை நடைபெறும் இடத்தில் ஏற்கனவே இருந்த தினசரி சந்தை கடைகள் அனைத்தும் 20.07.2022 காலிசெய்யப்பட்டு தற்காலிக தினசரிசந்தை மற்றும் அதில் உள்ள 106 கடைகளும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. தற்காலிக தினசரி சந்தை மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் ஏலம் எடுத்த உரிமதாரர் காலநீட்டிப்பு செய்து தர கோரி விண்ணப்பம் செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | தற்காலிக தினசரி சந்தை ஏல நடவடிக்கையில் உள்ளதால் 01.10.2022 முதல் 31.10.2022 முடிய உள்ள காலத்திற்கு உரிமம் நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டது. |
| 131 | **மன்றப்பொருள் எண்.17**<br>மேலூர் நகர் அழகர்கோவில் சாலையின் தென்புறம் உள்ள பழைய புல எண்.74/4, 5ஏ,9,10பி, 11 மற்றும் 12 புதிய நகரளவு வார்டு சி, பிளாக் 4, நகரளவு எண்கள்.17/5, 7,9,10 ஆகியவற்றில் உள்ள 3738.64ச.மீ இடத்தில் மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்து மேற்கண்ட இடத்தினை பொது உபயோகம் பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்ய மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் (ந.க.எண். 3443/2022/ம.மா நாள்.10.08.2022) ப.மணி, ப.கண்ணன், ப.செந்தில்குமார், செ.ப்ரீத்தி என்பவரின் இடத்தினை பொது உபயோகப் பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோகப் பகுதியாக மாற்றம் செய்திட மேலூர் உள்ளூர் திட்டக்குழும தீர்மானித்து தீர்மானம் இயற்றி அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து திரு.ப.மணி, ப.கண்ணன், ப.செந்தில்குமார், செ.ப்ரீத்தி என்பவரின் இடத்தினை பொதுஉபயோகப்பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோகப் பகுதியாக மாற்றம் செய்திட ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க மன்றத்தின் அனுமதிக்கு. | பரிந்துரை செய்ய அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு**<br><br>ப.மணி, ப.கண்ணன், ப.செந்தில்குமார், செ.ப்ரீத்தி என்பவரின் இடத்தினை பொது உபயோகப் பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோகப் பகுதியாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மதுரை அவர்களுக்கு பரிந்துரை செய்யலாம். | |
| 132 | **மன்றப்பொருள் எண்.18**<br><br>மேலூர் நகராட்சியில் 2021–2022ம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்த வருமானவரி , GST சேவைவரி, return file செய்த வகைக்கும், கீழ்க்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொண்டதற்கு Alayam Associates, Trichy நிறுவனத்திற்கு ரூ.39650/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>1. E-filing TDS Return contractors and staff salary records as 26Q & 24Q format uploading and processing fees- — Rs.19250/-<br>2. Contractors certificate downloading and staff salary certificate processing and downloading fees — Rs.6550/-<br>3. GST 7 TDS Return filing contractors 2021-22 and 7a certificate — Rs.13850/-<br>Total — Rs.39650/-<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3471/2011/பி1) | அனுமதிக்கப்பட்டது. |
| 133 | **மன்றப்பொருள் எண்.19**<br>சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.மதுரை வீரன் மற்றும் 19 நபர்களால் இந்நகராட்சி மீது கீழ்க்கண்ட விபரப்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கிற்கு Change of வக்காலத்து தயார் செய்ய கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.ஆர்.சுரேஷ்குமார் என்பவருக்கு ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ.1000/– வீதம் ரூ.20,000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |

| 1. | E-filing TDS Return contractors and staff salary records as 26Q & 24Q format uploading and processing fees- | Rs.19250/- |
|---|---|---|
| 2. | Contractors certificate downloading and staff salary certificate processing and downloading fees | Rs.6550/- |
| 3. | GST 7 TDS Return filing contractors 2021-22 and 7a certificate | Rs.13850/- |
| | Total | Rs.39650/- |

| வ.எண். | வழக்கு தொடர்ந்த நபர்களின் பெயர் | வழக்கு எண். |
|---|---|---|
| 1. | மதுரை வீரன் | W.P.MD.No22579/2019 |
| 2. | ஏ.சுரேஷ்குமார் | W.P.MD.No23480/2019 |
| 3. | சின்னச்சாமி | W.P.MD.No.13229/2021 |
| 4. | எம்.காளியம்மாள் | W.P.MD.No.13230/2021 |

| | | |
|---|---|---|
| 5. | ஏ.பெருமாள் | W.P.MD.No.13231/2021 |
| 6. | எம்.முருகன் | W.P.MD.No.13260/2021 |
| 7. | எஸ்.ராக்கம்மாள் | W.P.MD.No.13261/2021 |
| 8. | எம்.இருளாயி | W.P.MD.No.13262/2021 |
| 9. | முத்துலெட்சுமி | W.P.MD.No.13263/2021 |
| 10. | யு.சேவுகமூர்த்தி | W.P.MD.No.13264/2021 |
| 11. | எம்.பஞ்சு | W.P.MD.No.13265/2021 |
| 12. | எஸ்.குமார் | W.P.MD.No.13266/2021 |
| 13. | பி.பாண்டியம்மாள் | W.P.MD.No.13267/2021 |
| 14. | யு.மூக்காயி | W.P.MD.No.13268/2021 |
| 15. | மஞ்சுளா | W.P.MD.No.13269/2021 |
| 16. | எம்.பஞ்சு | W.P.MD.No.13270/2021 |
| 17. | எஸ்.பாண்டிச்செல்வி | W.P.MD.No.13273/2021 |
| 18. | கே.செல்வபாண்டி | W.P.MD.No.13274/2021 |
| 19. | டி.ஜி.சுப்பிரமணி | W.P.MD.No.12613/2021 |
| 20. | கார்த்திக் | W.P.MD.No.12902/2021 |

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி வழக்கின் அவசர அவசியம் கருதி மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் வக்காலத்து தாக்கல் செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 134 | **மன்றப்பொருள் எண்.20**<br><br>**15வது மத்திய நிதிக்குழு 2021–2022 ( Untied Grant ) ன்** கீழ், கீழ்க்கண்ட பணிகளுக்கு 15.09.2022 அன்று மின்ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற இரண்டு மின்ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குபட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைவாக ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **15வது மத்திய நிதிக்குழு 2021–2022 ( Untied Grant )** | | | |
| 1. | வார்டு எண்.6 வாரச்சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தினசரி சந்தை கடைகள் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | 5.00 | திரு.சி.அடைக்கலம், ஒப்பந்ததாரர் –0.32 % குறைவு | திரு.சுந்தரராஜன், ஒப்பந்ததாரர் 4.72 % அதிகம் |
| 2. | மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 20, பிஸ்மில்லா நகர் 3 , 4, மற்றும் 5வது குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. (Unicode 116006S68, 116006S69, 116006S70), | 5.00 | திரு.மகேந்திரன் ஒப்பந்ததாரர் –0.16 % குறைவு | திரு.எம்.லத்திப் ஒப்பந்ததாரர் 4.58 % அதிகம் |

அலுவலக குறிப்பு

வரிசை எண்.1 ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் திரு.சி.அடைக்கலம், என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.32% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதையும்,

வரிசை எண்.2ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் திரு.மகேந்திரன் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதையும், மேற்கண்ட பணிகளை அவசியப்பணியாக குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியிருப்பதால் ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 135 | **மன்றப்பொருள் எண்.21**<br><br>**தூய்மை இந்தியா திட்டம் 2.0 2022–23** ம் ஆண்டின் கீழ், கீழ்க்கண்ட பணிக்கு **15.09.2022** அன்று மின்ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற இரண்டு மின்ஒப்பந்தப்புள்ளிகள் விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குபட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைவாக ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **1** | **2** | 3 | 4 | 5 |
| | **தூய்மை இந்தியா திட்டம் 2.0–2022–23** | | | |
| **1.** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 4,வெள்ளநாதன்பட்டி மந்தை AD காலனி பகுதியில் புதிதாக சமுதாயக்கழிப்பறை கட்டும் பணி | **25.00** | திரு.ஆர்.செல்வ முருகன், ஒப்பந்ததாரர் **–0.02** % குறைவு | திரு.எம்.லத்திப், ஒப்பந்ததாரர் **3.16** % அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணிக்கு கலம் எண்.**4**ல் கண்ட ஒப்பந்தக்காரர் திரு.ஆர்.செல்வமுருகன் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.02% குறைவாக மின்ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதையும், மேற்கண்ட பணி அவசியப்பணியாக குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியிருப்பதால் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 136 | **மன்றப்பொருள் எண்.22**<br>மேலூர் நகராட்சி மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சி 31.12.1958ல் பேரூராட்சியிலிருந்து 01.01.1978 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக தொடங்கப்பட்டு முறையே 22.05.1998 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தற்போது வரை செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் சுற்றளவு 15.30 சதுர கிலோமீட்டர் ஆகும். இந்நகராட்சி சில கிராமங்களை உள்ளடக்கி 27 வார்டுகளாக நகராட்சி பகுதி பிரிக்கப்பட்டுள்ளது. 2011 ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 40017 அகும். இந்நகராட்சியினை சுற்றி 50க்கு மேற்பட்ட கிராமங்கள் உள்ளன.<br>மேலூர் நகராட்சி எல்லையிலிருந்து சுமார் 25 கிலோமீட்டர் தூரத்தில் மதுரை மாநகர் அமைந்துள்ளதால் மேற்படி கிராமங்களிலிருந்து பொதுமக்கள் தங்களின் குழந்தைகளின் கல்விக்காகவும், பணி நிமித்தமாகவும், மருத்துவ தேவைக்களுக்காகவும், சுமார் 20000 பேர் இந்நகராட்சி பகுதிக்கு வந்து செல்கின்றார்கள். இந்நகரம் கிராம பகுதிகள் உள்ளடக்கிய விவசாயம் சார்ந்த நகராட்சி பகுதி ஆகும்.<br>இந்நகராட்சியின் எல்லையிலிருந்து சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் தமிழகத்தில் பிரசித்தி பெற்ற திருக்கோவில்களில் ஒன்றான அழகர்கோவிலும், சுமார் 7 கி.மீ. தொலைவில் திருவாதவூர் திருமறைமலைநாதர் சிவன்கோவில் அமைந்துள்ளதால் இக்கோவிலில் மேற்கொள்ளப்படும் திருவிழாக்காலங்களில் பொதுமக்கள் இந்நகரில் அதிகஅளவில் வந்து செல்கின்றனர். மதுரை திருச்சி மெயின்ரோட்டில் அமைந்துள்ள நகரமாக இருப்பதால் போக்குவரத்திற்கு சிறந்த நகரமாக அமைந்துள்ளது. சென்னை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண். (MS) 238 நாள்.02.12.2008 ன்படி, இந்நகராட்சியின் 2022–23ம் ஆண்டிற்கான வருவாய் ரூ.4.00கோடிக்கு அதிகமாக இருப்பதால் மேலூர் நகராட்சியினை முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்த மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேலூர் நகராட்சியினை இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்த சென்னை நகராட்சி நிர்வாகஇயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 137 | **மன்றப்பொருள் எண்.23**<br><br>மேலூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பணிபுரியும் பணியாளர்கள் / 2947 மாணவிகள் பயன்பெறும் வகையில் Napkin Destroyer கருவி-4 எண்ணம் வழங்க தலைமையாசிரியரால் 15.09.2022ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளதின் அடிப்படையில் மேற்கண்ட பள்ளிக்கு ரூ.10.00இலட்சம் மதிப்பீட்டில் Napkin Destroyer கருவி-4 எண்ணம் வாங்க தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின்அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்கண்ட பணியினை இந்நகராட்சியின் கல்விநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 138 | **மன்றப்பொருள் எண்.24**<br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26, மில்கேட் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் மில்கேட் கே.கே. நகரில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி சேதமடைந்து ஸ்திரத்தன்மை இழந்து ஆபத்தான நிலையில் உள்ளதாலும், இடிந்து விழும் பட்சத்தில் உயிர்சேதம், பொருட்சேதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இடித்து அப்புறப்படுத்தவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 139 | **மன்றப்பொருள் எண்.25**<br><br>மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஓராண்டு ஆட்சியில் இந்நகராட்சியின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கென நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விளம்பரம் தினகரன் நாளிதழில் 28.07.2022 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டதற்கு ரூ.40740/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 140 | **மன்றப்பொருள் எண்.26**<br><br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திரு.மழுவேந்தி என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூர் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம்நிலை ஒப்பந்ததாராக பதிவுசெய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>141</td>
<td>

**மன்றப்பொருள் எண்.27**

இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திரு.அசோகன் என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூர் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம்நிலை ஒப்பந்ததாராக பதிவுசெய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>142</td>
<td>

**மன்றப்பொருள் எண்.28**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு அனைத்துப்பிரிவுகளிலும் உள்ள கீழ்க்கண்ட பிரிண்டர்களுக்கு தேவையான Toner Cartridge –கள் வாங்க **01.09.2022** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>Kycera Taxkalfa Toner (3212i)<br>ஒன்றின் விலை ரூ.</th><th>Canon 2900 B Toner (12A)<br>ஒன்றின் விலை ரூ.</th><th>Epson FX2175 க்கான Ribbon cartridge<br>ஒன்றின் விலை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>Grand Systems<br>172C, Kakka thoppu,<br>Madurai– 625001</td><td>9890</td><td>1060</td><td>495</td></tr>
<tr><td>2.</td><td>Jeeva Systems<br>16, Channel Road,<br>Meur</td><td>10230</td><td>1080</td><td>510</td></tr>
<tr><td>3.</td><td>Sakthi Computers,<br>161/4, Nagaikadi Bazaar,<br>Alagarkovil road,<br>Melur</td><td>9780</td><td>1020</td><td>475</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sakthi computers, Melur நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணிஉத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>143</td>
<td>

**மன்றப்பொருள் எண்.29**

மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் ஆக்கிரமிப்பு செய்ததை அகற்றுவது தொடர்பாக விளம்பரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ மூலம் மைக்செட் வைத்து விளம்பரம் செய்வதற்கும் அதற்கு செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>144</td>
<td>

**மன்றப்பொருள் எண்.30**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை , மக்காத குப்பைகள் , மறு சுழற்சிக்கு பயன்படும் பிளாஸ்டிகள் ஆகியவை என சுகாதார பணியாளர்கள் மக்களிடம் தரம் பிரித்து வாங்குவதை, மறு சுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் உள்ளிட்ட பொருட்களை சாக்குகளில் சேகரித்து வைக்க வேண்டியதால் 6 மாத காலத்திற்கு மாதம் ஒன்றிக்கு 250 சாக்குகள் வீதம் 6 மாத காலத்திற்கு 1500 சாக்குகள் விநியோகம் செய்ய 16.09.2022 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<table>
<tr><th>வ. எண்.</th><th>பெயர்</th><th>சாக்கு ஒன்றிக்கு ரூ.</th></tr>
<tr><td>1</td><td>பா. மணிக்குமரன், த/பெ பாண்டியன்,<br>5/4, பேங்க ரோடு,<br>மேலத்தெரு, மேலூர்.</td><td>24.50</td></tr>
<tr><td>2.</td><td>க.ரமேஷ், த/பெ கணேசன்,<br>14, சங்கரலிங்க.பிள்ளை தெரு,<br>மேலூர்.</td><td>26.00</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.பா.மணிக்குமரன் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

ந.க.எண்.1244/2022/எச்1

</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>145</td>
<td>மன்றப்பொருள் எண்.31<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 4 சக்கர வாகனங்களை இயக்க போதிய ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மூலம் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம்பிரிக்கும் பணி தொய்வடைகிறது. எனவே பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்களை இயக்க 4 ஓட்டுநர்கள் வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண்.11664/2022/கஇ2 நாள் 13.06.2022 ன் படி 2022–23ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்துள்ள ஒட்டுநனருக்கான தினக் கூலி அடிப்படையில் விலைப்புள்ளி கோருவதற்கும். அதற்கான ஓராண்டு செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>146</td>
<td>மன்றப்பொருள் எண்.32<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 4 சக்கர வாகனங்களை இயக்க 4 ஓட்டுநர்கள் பணி செய்ய 20.09.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பெயர்</th><th>ஒரு ஓட்டுநருக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.</th></tr>
<tr><td>1</td><td>விவேகானந்தர் டெக்னிக்கல் லேபர் காண்ட்ரக்ட் சர்வீஸ், இன்டஸ்ரியல் கோ ஆப்ரேட்டீவ் சொசைட்டி லிமிடெட் , மதகுபட்டி.</td><td>520</td></tr>
<tr><td>2</td><td>தேவ் மோட்டார்ஸ் அன்ட் இன்ஜினியரிங் கம்பெனி, சந்தைபேட்டை, மேலூர்.</td><td>590</td></tr>
<tr><td>3</td><td>சுரேஷ் பம்ப் டிரேடர்ஸ், மதகுப்பட்டி</td><td>555</td></tr>
</table>
பெறப்பட்ட மேற்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுசுகாதாரப்பிரிவு அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய விவேகானந்தர் டெக்னிக்கல் லேபர் காண்ட்ரக்ட் சர்வீஸ், இன்டஸ்ரியல் கோ ஆப்ரேட்டீவ் சொசைட்டி லிமிடெட் , மதகுபட்டி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 147 | **மன்றப்பொருள் எண்.33**<br>2022–2023ம் ஆண்டிற்கு மேலூர் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், அலுவலகப்பணியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள், ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோர்களுக்கான சீருடை , தையல்கூலி மற்றும் ஷு, காலனிகள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 148 | **மன்றப்பொருள் எண்.34**<br>மேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராபரியாய் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவைசிகிச்சை செய்து தடுப்பூசி போட்டு பின் கவனிப்பு மேற்கொண்டு அரசு உத்தரவின்படி செயல்படுத்தி தெரு நாய்களின் எண்ணிக்கையினை கட்டுப்படுத்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.6,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |